Chapter XXII Code of Criminal Procedure.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.

Case No.: **CC.345/2024**

Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW-1 (LW-1)**

Name / Father's Name: **திரு. மகேஷ் க/பெ. கோபால் கிருஷ்ணன்**

Village/ Taluk:

Caste, Religion:

Calling, Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04.10.2024.**

துவக்க நேரம் **12.05**

**முதல் விசாரணை**

1) நான் கெங்கவல்லி குடியிருந்து வருகிறேன். இரும்பு சாமான் கடை வைத்துள்ளேன். கடந்த 18.06.2022ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நான் எனது கடையில் வியாபாரம் பார்த்து கொண்டிருந்தேன். கடைக்கு கிளிப் வாங்குவது போல் ஆஜர் எதிரி வந்தார் (சாட்சி எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளித்தார்) கிளிப் வாங்கிக்கொண்டு, வேறு ஏதேனும் சாமான் கேட்டார், எடுப்பதற்காக உள்ளே செல்ல சற்று திரும்பிய போது நான் கழுத்தில் அணிந்திருந்த தங்க கொடியை பறித்துவிட்டு, அவர் வந்த ஹீரோ ஹோண்டா பைக்கிள் ஏறி சென்றுவிட்டார்.

2) பறித்து சென்ற தங்க செயின் 2 தங்க காசுகள், தங்காத்தால் ஆன 2 மாம்பிஞ்சு, ஆகிய இருந்தது, அதன் மொத்த எடை 8-1/2 பவுன் ஆகும்.என்னிடம் காட்டப்படும் புகைபடத்திலுள்ள தங்க செயின், இரண்டு காசுகள் தங்ககாசுகள், இரண்டு தங்கத்தால் ஆன மாம் பிஞ்சுகள் தான், அன்றை தினம் என்னிடம் பறித்து சென்றது. மேற்படி தங்க செயின், இரண்டு காசுகள் தங்ககாசுகள், இரண்டு தங்கத்தால் ஆன மாம் பிஞ்சுகள் கொண்ட புகைபடம் ச.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) நான் பின்னால் துறத்தி சென்றேன். அந்த நபர் ஓடி விட்டார். எனவே சம்பவம் சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டி கெங்கவல்லி காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) நான் ஆணையம்பட்டி புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் வசிக்கும் இடம் மெயின் ரோட்டில் இருக்கிறது. அது வண்டி, வாகனம் செல்லக்கூடிய ஆள் நடமாடம் பகுதி. ஏதாவது சம்பவம் நடைபெற்று சத்தம் போட்டால் அருகில் இருப்பார்கள் உடனே கூடிவிடுவார்கள் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் 18.06.2022ம் தேதியன்று நடந்தது. சம்பவ சமயத்தில் கடையில் நான் மட்டும் தான் இருந்தேன். எனது கடைக்கும் வீட்டிற்கும் 10 அடி தூரம் தான் இருக்கும்.

2) சம்பவ சமயத்தில் எனது வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் எனது அத்தை இருந்தார்கள். நான், எனது புகாரில் ஒரு நபர் வந்ததாக தான் குறிப்பிட்டுள்ளேன். சாட்சி புகார் கொடுக்கப்பட்டு, படித்து பார்க்க சொல்லப்பட்டது. சாட்சி புகாரை படித்து பார்த்துவிட்டு இரண்டு நபர்கள் வந்ததாக புகாரில் குறிப்பிட்டிருப்பதாக கூறினார். புகாரில் 2 நபர்கள் என குறிப்பிட்டு, தற்சமயம் வழக்கிற்காக ஒரு நபர் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) புகாரில் 2 நபர்கள் வந்ததாகவும், ஒரு நபர் மட்டும் என்னிடம் வந்து கிளிப் கேட்டதாகவும் குறிப்பிட்டுள்ளேன், மற்றொரு நபர் என்ன செய்து கொண்டிருந்தார் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. ஹீரோ ஹோண்டா வாகனத்தில் வந்ததாக குறிப்பிட்டுள்ளேன். அதன் நீறம் என்னவென்று புகாரிலும், வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

4) எதிரி கடைக்கு வந்து பிளாஸ்டிக் கிளிப் கேட்டார். நான் கொடுத்தேன். அதனை அவர் பெற்றுக்கொண்டார். நான் புகாரிலும், வாக்குமூலத்திலும் அதை குறிப்பிடவில்லை. எதிரி கையில் எந்த ஒரு பொருளையும் எடுத்து வரவில்லை. வெறும் கையில் தான் வந்தார். செயினை பறிக்கும் போது என்னை அச்சுறுத்தும் விதமாக பயம் புரித்தினாரா என்றால் இல்லை.

5) செயினை பறித்துவிட்டு, இருசக்கர வாகனத்தில் வீரகனூர் வழியாக சென்றார். இருசக்கர வாகனத்தில் யார் ஓட்டி சென்றார்கள் என்றால் நான் செயின் அறுத்த பதற்றத்தில் சரியாக பார்க்கவில்லை. அவர் தான் ஓட்டி சென்றார். எதிரி வாகனத்தை ஓட்ட செல்லவில்லை என்றாலும், இருநபர்கள் வந்தார்கள் என்றாலும், மற்றொரு நபர் வாகனத்தை ஓட்டி சென்றார் என்றாலும் சரியல்ல.

6) என்னுடைய மறுவாக்குமூலத்தில் எதிரி வாகனத்தை மறைத்து வைத்தாக கூறியுள்ளேன், அவர் அவ்வாறு மறைத்து வைத்தாரா என்றால் இல்லை, ஓரமாக வாகனத்தை நிறுத்தினார். தாலி செயினில் டிசைன் மற்றும் அதன் அடையாளத்தை புகாரிலும், வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் weight less கொடி என்று தான் குறிப்பிட்டுளேன். மாம்பிஞ்சு கல்லால் ஆனாதா, தங்கத்தால் ஆனாதா அல்லது தாலியின் வடிவம் என்ன ஆகியவற்றை குறிப்பிட்டு புகாரிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

7) எதிரியின் அங்க அடையாளம், எதிரியின் மற்ற விவரங்களை புகார் அளிக்கும்போது காவல்நிலையத்தில் கூறினேனா என்றால் இல்லை. எதிரி செயினை பறித்துவிட்டு சென்றதாக சொல்லும் பொழுது நான் சத்தம் போட்டு பின்னால் சென்றேன், பக்கத்து காட்டுக்காரர் ரமேஷ் என்பவர் சத்தம் கேட்டு வந்தார். ரமேஷ் என்பவருடன் ஆட்டோ எடுத்து வந்தார், நாங்கள் இருவரும் ஆட்டோவில் பின் தொடர்ந்து வீரகனூர் நோக்கி சென்றோம்.

8) தங்கராசு என்பவர் சிறிது தூரம் செல்லும்போது வந்ததாகவும், அவரிடம் விபரத்தை கூற, அவரும் சிறிது தூரம் சென்றதாகவும், புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான், அவ்வாறு வழக்கிற்காக சேர்த்து சொல்கிறேன் என்றால் இல்லை. மேற்படி தங்கராசுவிடம், எதிரியின் அடையாளத்தை கூறினேனா என்றால் கூறினேன். காவல் நிலையத்தில் உடனடியாக புகார் அளித்தேன். காவல் நிலையத்தில் நான், எனது மாமனார் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் சென்று புகார் அளித்தேன். காவல் நிலையத்திலிருந்து நகை கண்டிப்பிடிக்கப்பட்டதாக தகவல் தெரிவித்தார்கள். நான், எனது கணவருடன் காவல் நிலையம் சென்றேன்.

9) காவல் நிலையத்திற்கு நானும், எனது கணவரும் மட்டும் தான் சென்றோம், வேறு யாரும் வரவில்லை. காவல் நிலையத்தில் எதிரியை காட்டி அடையாளம் காட்டச்சொன்னார்களா சொன்னார்கள். பார்த்துடனே கூறிவிட்டானா என்றால் உடனடியாக அடையாளம் கூறிவிட்டேன், முகம் எனக்கு மறக்கவில்லை. நான் மேற்கூறியது தவறு என்றாலும், எதிரியின் முகம் நினைவில் இருந்திருந்தால் புகாரிலேயே அடையாளத்தை கூறியிருப்பேன் என்றாலும், தற்சமயம் வழக்கிற்காக எதிரியை அடையாளம் தெரிந்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) நான் காவல் நிலையம் சென்ற போது நகையை கண்டிப்பிடித்துவிட்டதாக நகையை மதியம் நேரம் காண்பித்தார்கள். நான், எனது கணவர், சின்னதுரை என்பவர் காவல் நிலையத்தில் கையெழுத்து செய்தோம். எதில் கையெழுத்து செய்தோம் என்ற விபரம் தெரியவில்லை. நகையை எங்கிருந்து கைப்பற்றியதாக காவலர்கள் கூறினார்களா என்றால் என்னிடம் சொல்லவில்லை, நான் வெளியில் இருந்தேன். போலீசார் எனது நகை அண்ணபுரத்தில் உள்ள மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கோவிந்தன் வயல் ஓரமாக இருந்ததாக தகவல் கொடுத்து, அங்கு வரச்சொன்னார்கள் என்றாலும், வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

11) மேற்கூரிய இடத்தில் நகையை கைப்பற்றினார்கள். ஆனால் எங்களுக்கு தகவல் சொல்லவில்லை. வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும், எங்களை அழைத்து சென்று தான் நகையை கைப்பற்றினார்கள் என்றாலும், மறுவாக்குமூலத்தில் அதை பற்றி கூறிவிட்டு, தற்சமயம் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் குறிப்பிட்டவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறான ஒரு வழக்கை கொடுத்து, அதற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இவ்வழக்கு பொய்யானது என்பதால் வழக்கு நிலைத்தக்கத்தல்ல என்றாலும், எதிரி விடுவிக்கப்பட வேண்டுமென்றாலும் சரியல்ல.

முடிவு நேரம் 12.46.

ஒம்/–S.ஷண்மதி,
நீதித்துறை நடுவர் எண்.2 (முழுப்பொறுப்பு)
ஆத்தூர்.

Chapter XXII Code of Criminal Procedure.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.

Case No.: **CC.345/2024**

Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW-2**

Name / Father's Name: **திரு. ரமேஷ் த/பெ. வைய்யாதுரை**

Village/ Taluk:

Caste, Religion:

Calling, Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04.10.2024.**

துவக்க நேரம் **12.46**

**முதல் விசாரணை**

நான் அண்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 அவருடைய நகையை பறித்து விட்டு சென்றுவிட்டதாக, தேதி, மாதம் நினைவில்லை, சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் மதியம் 02.30 மணியளவில் என்னிடம் கூறினார், உடனடியாக நான் எனது இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டு அ.சா.1 ஐ ஏற்றி கொண்டு, தெடாவூர் வழியாக 4 கி.மீ சென்றோம். ஆள் யாரும் கிடைக்கவில்லை. திரும்ப வீட்டிற்கு வந்துவிட்டோம்.

பின்னர் காவல்நிலையம் சென்று அ.சா.1 புகார் அளித்தார். அவருடன் நானும், அவரது மாமனார் சக்கரவர்த்தியும் உடன் சென்றோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது பக்கத்து வீட்டில் வசிப்பவர், நான் சம்பவம் சமயத்தில் வீட்டில் இருந்தேன், அ.சா.1 தகவல் தெரிவித்த பின்னர் தான், எனக்கு சம்பவத்தை பற்றி தெரியவந்தது, நான் நேரில் எதையும் பார்க்கவில்லை, முதலில் என்னிடம் தான் அ.சா.1 தகவலை தெரிவித்தார், பின்னர் வழியில் பைக்கிள் வந்த ஒருநபரிடம் தகவலை சொல்லி விசாரித்தோம், அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் இல்லை, நாங்கள் சென்ற

இருசக்கர வாகனம் என்னுடையது தான், எனது மறுவாக்குமூலத்தில் அ.சா.1 வேறுஒரு வாகனத்தில் சென்றதாகவும், நான் வேறு ஒரு வாகனத்தில் சென்றதாகவும் கூறிவிட்டு, தற்சமயம் வழக்கிற்காக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அ.சா.1 எனது ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் சம்பவத்தை நேரில் பார்க்காததால் சாட்சி ஏற்புடைதல்ல என்றாலும் சரியல்ல.

ஒம்/–S.ஷண்மதி,
நீதித்துறை நடுவர் எண்.2 (முழுப்பொறுப்பு)
ஆத்தூர்.

Chapter XXII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.

Case No.: **CC.345/2024**

Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW- 3 (LW-7 )**

Name / Father's Name: **திரு. தமிழ்செல்வன் த/பெ. செல்லதுரை**

Village/ Taluk:

Caste, Religion:

Calling, Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04.10.2024.**

துவக்க நேரம் **01.00**

**முதல் விசாரணை**

நான் அண்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கோபாலின் மனைவி அவரது நகை திருடுபோனதாக புகார் அளித்திருந்தார். அது சம்மந்தமாக கடந்த 19.06.2022 அன்று கெங்கவல்லி போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து, மாதிரி வரைபடம் வரைந்து, விசாரணை செய்தார்கள், அங்கு நானும், முத்துமணி என்பவரும் இருந்தோம், என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

போலீசார் காலை 06.00 மணியளவில் சம்பவம் சம்மந்தமாக அங்கு வந்து விசாரணை செய்தார்கள், போலீசார் இரண்டு நபர்கள் வந்தது சம்மந்தமாக ஏதாவது தகவல் தெரிவித்தார்களா என்றால் இல்லை, பைக்கில் வந்து நகையை பறித்து சென்றதாக கூறினார்கள். இதற்கு முன்பாக நான் இருக்கும் பகுதியில் இதுபோன்ற சம்பவம் ஏதேனும் நடைபெற்றதா என்றால் இல்லை.

அ.சா.1 எனது வீட்டிற்கு அருகில் இருப்பதாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–S.ஷண்மதி,
நீதித்துறை நடுவர் எண்.2 (முழுப்பொறுப்பு)
ஆத்தூர்.

Chapter XXII Code of Criminal Procedure.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.

Case No.: **CC.345/2024**

Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW- 4 (LW-8 )**

Name / Father's Name: **திரு. சின்னதுரை த/பெ. ராமசந்திரன்**

Village/ Taluk:

Caste, Religion:

Calling, Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04.10.2024.**

துவக்க நேரம் **01. 10**

**அரசு தரப்பில் பிரிவு 348 BNSS-ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி விசாரணை**

**முதல் விசாரணை**

நான் அண்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். நானும் எனது நண்பர் மணி ஒரு வேலையாக ஒரு மாதத்திற்கு முன்னர் 28ம் தேதி அண்ணாபுரம் காலனி வழியாக சென்று கொண்டிருந்த போது, போலீசார் அங்கு மாரியம்மன் கோவில் பின்புறம் நின்று கொண்டிருந்தார்கள். நாங்கள் சென்று என்ன வென்று கேட்டபோது, நகையை அங்கு பதித்து வைத்திருப்பதாகவும், அதை எடுக்க வந்ததாகவும் கூறினார்கள், அங்கு ஆஜர் எதிரியை அழைத்து வந்திருந்தார்கள், பதித்து வைத்திருந்த நகையை ஆஜர் எதிரி எடுத்து கொடுத்தார். அதை எங்கள் முன்னிலையில் போலீசார் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி சம்பவம் சமயத்தில் அங்கு போலீசார் மற்றும் எதிரி இருந்தார், ஊர் மக்கள் யாரும் இல்லை, நகையை எடுக்கும் பொழுது ஊர் மக்கள் யாருமில்லை, அ.சா.1னும் இல்லை, நகை மாரியம்மன் கோவில் பின்புறத்திலுள்ள கோவிந்தன் விவசாய நிலத்திற்கு அருகில் எடுக்கப்பட்டது, சம்பவயிடத்திற்கு அருகே

குடியிருப்புகள் உள்ளதா என்றால் உள்ளது. வீடுகளில் மக்கள் இருப்பார்கள் என்றாலும் பகல் நேரத்தில் சத்தம் கேட்டால் உடனே வருவார்கள் என்றாலும், வழக்கிற்காக மக்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்று வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல,

போலீசார் சம்பவயிடத்திற்கு சென்ற போது அவர்களுடன் எதிரி, புகார்தாரர், புகார்தாரரின் கணவர் இருந்தார் என்றாலும், வழக்கிற்காக அவர்கள் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, கைப்பற்றப்பட்ட நகையை என்னவென்றால் தாலி கொடி, தாலி காசுகள் இருந்தது. மேற்படி நகை மண்ணிலிருந்து எடுக்கும்பொழுது கவரில் இருந்ததா, துணி பையில் வைக்கப்பட்டிருந்தா அல்லது நேரடியாக மண்ணில் புதைக்கப்பட்டிருந்தா அதை பார்க்கவில்லை. கைப்பற்றுதல் மகஜரில் சம்பவயிடத்தில் கையெழுத்து பெற்றார்களா என்றால் இல்லை, காவல் நிலையத்தில் அன்றைய தினமே கையெழுத்து செய்தேன். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் பொருளை கைப்பற்றவில்லை என்றாலும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஒம்/–S.ஷண்மதி,
நீதித்துறை நடுவர் எண்.2 (முழுப்பொறுப்பு)
ஆத்தூர்.